www.Padasalai.Net www.TrbTnpsc.com

V9T

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு 9

கால அளவு: 3:00 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **15×1=15**

1) பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று ..........
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

2) சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?
அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்
இ) அள்ளல் - சேறு ஈ) மடிவு - தொடக்கம்

3) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனறித் தேர்வு
ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசியத் திறனறி,கல்வி உதவித் தொகைத் தேர்வு
ஈ) மூன்றும் சரி

4) கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன
ஆ) இந்திய நூலகவியலின் தந்தை என அறியப்படுபவர் யார்?
இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை
ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

5) தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள்
அ) இலங்கை, இந்தியா ஆ) இந்தியா, சிங்கப்பூர்
இ) இலங்கை, சிங்கப்பூர் ஈ) இந்தியா, மலேசியா

6) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச் சொற்கள் ஆ) வட சொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

7) மணநூல் என்று அழைக்கப்படுவது ..........
அ) முத்தொள்ளாயிரம் ஆ) சீவகசிந்தாமணி
இ) இராவணகாவியம் ஈ) மதுரைக்காஞ்சி

8) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு
இ) இலஞ்சி ஈ) புலரி

9) குடும்ப விளக்கு நூலின் ஆசிரியர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வைரமுத்து ஈ) புலவர் குழந்தை

10) தமிழ்விடு தூது ............. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

11) தொல்காப்பியம் ............ அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
அ) 2 ஆ) 3
இ) 4 ஈ) 5

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**பாடலைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே

12) இப்பாடலின் ஆசிரியர் …………
அ) வைரமுத்து ஆ) தமிழன்பன் இ) குடபுலவியனார் ஈ) சாத்தனார்

13) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் …………
அ) தமிழோவியம் ஆ) புறநானூறு
இ) மணிமேகலை ஈ) என் சமகாலத் தோழர்களே

14) சமயங்களைத் தாயென வளர்த்தது ………..
அ) சித்தர் ஆ) தமிழ் இ) சிந்தனை ஈ) மரபு

15) எத்தனை எத்தனை - இலக்கணக்குறிப்பு ……….
அ) வினைத்தொகை ஆ) அடுக்குத்தொடர்
இ) இரட்டைக்கிளவி ஈ)பண்புத்தொகை

## பகுதி - II

**அ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) **விடைக்கேற்ற வினா அமைக்க**
அ) 1991 இல் இணையம் பொது மக்களின் பயன்பாட்டுக்கு வந்தது
ஆ) ஜான்சி ராணி பெண்கள் படையில் ஜானகி, ராஜாமணி முதலானோர் தலைசிறந்த தலைவர்களாக விளங்கினர்.

17) உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?

18) உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

19) மதுரைக்காஞ்சி - பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

20) நடுகல் என்றால் என்ன?

21) அடி பிறழாமல் எழுதுக.
'மிகுதியான்....' எனத் தொடங்கும் திருக்குறள்

**ஆ) எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22) இடி குரல், பெருங்கடல் - இலக்கணக்குறிப்புத் தருக.

23) **விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.**
அ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - ………………
ஆ) திருக்குறளின் அதிகாரங்கள் - ……………………

24) ஆகுபெயர் - விளக்குக.

25) **மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க**
அ) உடும்புப்பிடி
ஆ) மேளதாளத்துடன்

26) **ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.**
அ) சேர்ந்து - சேர்த்து
ஆ) மாறு - மாற்று

27) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக

28) **கலைச்சொல் தருக.**
அ) Excavation ஆ) Indian National Army

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

அ) சிறு வினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி) 2×3=6

29) நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.

30) ஏறு தழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

31) **பின்வரும் உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

ஏரில் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள் 'ஏறுகள்' என்றழைக்கப்பட்டன. மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல். அவற்றை ஒப்பனை செய்து பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட அவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் பொங்கலை ஊட்டி விடுவர். இதன் தொடர்ச்சியாகத் தங்கள் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே 'ஏறு தழுவுதல்' ஆகும்.

அ) ஏறுதழுவுதல் என்றால் என்ன?

ஆ) மாட்டுப்பொங்கல் குறித்து எழுதுக.

இ) உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க 2×3=6
34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்

32) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

33) குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

34) **அடி பிறழாமல் எழுதுக.**

காடெல்லாம் எனத் தொடங்கும் பெரிய புராணம் மனப்பாடப் பாடல்

**(அல்லது)**

அள்ளல் எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் மனப்பாடப் பாடல்

இ) சிறு வினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி) 2×3=6

35) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

36) விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை? எடுத்துக்காட்டு தருக.

37) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி - IV

அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38) **நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க**

உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் பிப்ரவரி 21 விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க

**(அல்லது)**

**கவிதை படைக்க** - அன்பின் வழி

39) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

உங்கள் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


V9T

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) அ) மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"

Without even a moment's thought, Birbal replied "there are fifty thousand five hundred and eighty nine crows, my lord",

"How can you be so sure?" asked Akbar.

Birbal said, "Make your men count, My lord, If you find more crows. It means somehow come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere."

Akbar was pleased very much by Birbal's wit.

(அல்லது)

ஆ) நீ பாராட்டுப் பெற்ற சூழல்கள் 5 எழுதுக.

42) நயம் பாராட்டுக.

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில் விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

பகுதி - V

விரிவான விடையளி. 3×8=24

43) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

44) அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

45) கட்டுரை வடிவில் விடை தருக.

அ) எங்கள் ஊர்ச் சந்தை - என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

- - - - - - - - -

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com